முழுப்பதிப்புரிமையுடையது


அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (சாதாரண தர)ப் பரீட்சை - 2022 (2023)

## 87 - தொடர்பாடலும் ஊடகக் கல்வியும்

### புள்ளி வழங்கும் திட்டம்



இது விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

**கல்விப் பொது தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - 2022 (2023)**

**87 - தொடர்பாடலும் ஊடகக் கல்வியும்**

## தொடர்பாடலும் ஊடகக் கல்வியும் I

**1 ஆம் வினாத்தாளின் 40 வினாக்கள்**

1 x 40 = 40 புள்ளிகள்

## தொடர்பாடலும் ஊடகக் கல்வியும் II

**1 ஆம் வினா கட்டாயமானது**

ஒவ்வொரு பிரிவுக்கும் 2 புள்ளிகள் வீதம் பத்து வினாக்கள் 2 x 10 = 20 புள்ளிகள்

**2 முதல் 7 ஆம் வினாக்கள்**

தெரிவு செய்யப்பட்ட 4 வினாக்களுக்கு 4 x 10 = 40 புள்ளிகள்

**மொத்தம் 100 புள்ளிகள்**

பகுதி வினாக்களுக்கான புள்ளிகள்

(2 ஆம் வினாவில் இருந்து 7 ஆம் வினா வரை)

| | | |
|---|---|---|
| (i) - | பகுதி | 01 புள்ளிகள் |
| (ii) - | பகுதி | 02 புள்ளிகள் |
| (iii) - | பகுதி | 03 புள்ளிகள் |
| (iv) - | பகுதி | 04 புள்ளிகள் |
| | | 10 புள்ளிகள் |

| | | |
|---|---|---|
| **வினாத்தாள் I** | **மொத்தம்** | **40 புள்ளிகள்** |
| **வினாத்தாள் II** | **மொத்தம்** | **60 புள்ளிகள்** |
| | | **100 புள்ளிகள்** |

## க.பொ.த (சாதாரண தர)ப் பரீட்சை - 2022(2023)
## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடலுக்கான பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன் பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. சகல உதவிப் பரீட்சகர்களும் விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற மைப் பேனாவை பயன்படுத்தவும்.
2. பிரதம பரீட்சகர் ஊதாநிற மைப்பேனாவைப் பயன்படுத்த வேண்டும்.
3. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும் போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
4. இலக்கங்களை எழுதும் போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, ஒப்பம் இடவும்.
5. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பின்னங்களாகப் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.
6. எண்கணித பரீட்சகரினால் புள்ளிகள் பிழையற்றது என உறுதிப்படுத்த நீலநிற அல்லது கறுப்புநிறப் பேனாவினை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ........................................ ✓ △ $\frac{4}{5}$
........................................
........................................

(ii) ........................................ ✓ △ $\frac{3}{5}$
........................................
........................................

(iii) ........................................ ✓ △ $\frac{3}{5}$
........................................
........................................

(03) $(i)\ \frac{4}{5} + (ii)\ \frac{3}{5} + (iii)\ \frac{3}{5} = \boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள்**

1. **துளைத்தாள் தயாரித்தல்**

I. புள்ளி வழங்கும் திட்டத்தின் படி சரியான தெரிவைத் துளைத்தாளில் அடையாளமிடவும்.

II. அவ்வாறு அடையாளமிடப்பட்ட இடத்தை வெட்டி நீக்கித் துளைத்தாளைத் தயாரிக்கவும்.

III. துளைத்தாளை விடைகளின் மீது சரியாக வைத்துக் கொள்ளக்கூடியதாகச் சுட்டெண் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான விடைகளின் எண்ணிக்கையைக் காட்டும் அடைப்பையும் வெட்டி நீக்கவும்.

IV. சரியான, பிழையான விடைகளை குறிப்பிடக்கூடியதாக ஒவ்வொரு வரிசைக்கும் இறுதியில் வெற்று நிரையொன்றை வெட்டி ஏற்படுத்திக் கொள்ளவும்.

**V. வெட்டிக்கொண்ட துளைத்தாளில் பிரதம பரீட்சகரிடம் கையொப்பம் பெற்று அங்கீகரித்துக் கொள்ளவும்.**

2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்து விட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை √ அடையாளத்தாலும் பிழையான விடையை X அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் எழுதவும். அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை மற்றும் கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளினால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும், **பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் √ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.**
2. புள்ளிகளை குறிப்பிடும் போது ஓவலண்ட் கடதாசியின் இடது பக்க நிரலைப் பயன்படுத்தவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன்பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக **2 இலக்கங்களில் பதியவும்.** வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டிவிடவும்.
4. மொத்தப் புள்ளிகளை கவனமாக கூட்டி முன்பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் ஒவ்வொரு விடைக்கும் வழங்கப்பட்டுள்ள புள்ளிகளின் தொகையினை ஒவ்வொரு பக்கமாக கூட்டவும். அக்கூட்டுத்தொகை உங்களால் முன்பக்கத்தில் மொத்தம் எனக் குறிப்பிட்ட மொத்தபுள்ளிகளுக்கு சமமானதா? என பரீட்சிக்கவும்?

★ புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

I. ஒரு வினாப்பத்திரம் உள்ள பாடங்கள் தவிர ஏனைய சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்பட மாட்டாது.

II. ஒவ்வொரு வினாப்பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியான புள்ளிப்பட்டியலில் பதியப்படவேண்டும்.

III. வினாப்பத்திரம் I இற்கான புள்ளிப்பட்டியலில் **"Total Marks"** என்ற நிரலில் பதிந்து **எழுத்திலும் எழுத வேண்டும்.**

IV. வினாப்பத்திரம் II இற்கான புள்ளிப்பட்டியலை தயார் செய்யும் போது பகுதிப் புள்ளிகளைப் பதிவதோடு வினாப்பத்திரம் II இன் இறுதிப் புள்ளிகளை புள்ளிப் பட்டியலில் **"Total Marks"** என்ற நிரில் பதியவும்.

V. 43 சித்திரப் பாடத்திற்குரிய I,II மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியிலில் பதிந்து **எழுத்திலும் எழுத வேண்டும்.**

VI. 21 - சிங்களமொழியும் இலக்கியமும், 22 - தமிழ்மொழியும் இலக்கியமும் ஆகிய இரு பாடங்களும் வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளிப் பட்டியிலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். வினாப்பத்திரம் II, III இற்கான பகுதிப் புள்ளிகளை உள்ளடக்கி அவ் வினாப்பத்திரத்தின் மொத்தப் புள்ளிகளை, புள்ளிப்பட்டியலில் பதிய வேண்டும்.

**முக்கிய குறிப்பு:**

I. சகல சந்தர்ப்பங்களிலும் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் உரிய முழுப் புள்ளியானது முழுத்தானத்தில் புள்ளிப் பட்டியிலில் பதியப்படுதல் வேண்டும். எந்த விதமான காரணங்களிற்காகவும் வினாப்பத்திரத்தின் இறுதிப் புள்ளியானது தசம தானங்களில் பதியப்படலாகாது.

II. புள்ளிப் பட்டியலின் சகல பக்கங்களிலும் புள்ளிகளைப் பதிந்த உதவிப்பரீட்சகர், புள்ளிகளை சரிபார்த்த உதவிப்பரீட்சகர், மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் எண்கணித பரீட்சகர் மற்றும் பிரதம பரீட்சகர் தமது குறியீட்டு இலக்கத்தை எழுதி கையொப்பமிட்டு உறுதிப்படுத்துவது கட்டாயமாகும்.

# விடைத்தாள் வினாக்களும் தொடர்புடைய கற்றற்பேறுகளும்
# 87 - தொடர்பாடலும் ஊடகக் கல்வியும்

## பகுதி I

01. தொடர்பாடல் என்ன என்பதை எளிமையாக வரையறை செய்வார்.
02. செய்தி உள்ளடக்கம் பற்றிய அறிவைப் பெற்று செய்தியை அறிக்கையிடுவார்.
03. இலங்கையின் சமகால வெகுசன ஊடக உரிமையாண்மைகளை வகைப்படுத்திக் கூறுவார்.
04. உலக அச்சு ஊடக உருவாக்கம் மற்றும் அதன் வளர்ச்சி பற்றி படிமுறைப்படி விளக்குவார்.
05. தொடர்பாடல் என்ன என்பதை எளிமையாக வரையறை செய்வார்.
06. செய்தி என்பதை வரையறை செய்வார்.
07. மனிதனுக்குள் ஆளுள் தொடர்பாடல் நடைபெறும் செயன்முறை பற்றி உயிரியல் விஞ்ஞான ரீதியாகத் தகவல் முன்வைப்பார்.
08. செய்திப்பத்திரிகை உள்ளடக்கத்தை ஆராய்வார்.
09. தொடர்பாடல் என்பதைப் பலவித அர்த்தங்களுக்கூடாக விபரிப்பார்.
10. மொழியின் இரட்டைத் தன்மை பற்றி கருத்துக்களை முன்வைப்பார்.
11. முறைசார் தொடர்பாடல் செயன்முறையின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுவார்.
12. தகவல் முன்வைக்கும் செயன்முறைத் திறன்களை வெளிப்படுத்துவார்.
13. ஆளுள் தொடர்பாடல் நடைபெறும் பல்வேறு சந்தர்ப்பங்களைக் கூறுவார்.
14. பல்வேறு விதமான படைப்பாக்கப் புகைப்படங்களை சேகரிப்பார்.
15. உலகம் பூராகவும் இடம்பெறும் தொடர்பாடல் மற்றும் தகவல் பரிமாற்றம் பற்றி குறிப்பிடுவார்.
16. வெகுசன ஊடகங்கள்வழி மனித உரிமைகளை பாதுகாக்கும் மற்றும் அதற்குரிய கடமைகளை மேற்கொள்ளும் சமூகத்தைக் கட்டியெழுப்பப் பொருத்தமான செயற்பாடுகளை முறையாக ஆராய்வார்.
17. தகவல் முன்வைக்கும் அடிப்படை மாதிரியின் பாவனையுடன் சரியான முறையில் தகவல் முன்வைப்பார்.
18. இலங்கையில் வானொலி உருவாக்கம் பற்றி விபரிப்பார்.
19. சரியான தொழில்நுட்ப உபாய வழிகளைப் பின்பற்றி புகைப்படம் எடுத்தலில் ஈடுபடுவார்.
20. தெரிவு செய்யப்பட்ட செய்திப்பத்திரிகை நிறுவனத்தின் ஒழுங்கமைப்புக் கட்டமைப்பிற்கேற்ப ஒவ்வொரு பகுதியினர் பற்றியும் அப்பகுதிகளின் செயற்பாடுகள் பற்றியும் விபரிப்பார்.
21. பல்வேறு படைப்பாக்கவழிப் புகைப்படங்களைச் சேகரிப்பார்.
22. பால்நிலைச் சமத்துவம் பற்றிக் கருத்துக்களை முன்வைப்பார்.
23. அலுவலக ஊடக உபகரணங்களை இனங்காண்பார்.
24. தொலைக்காட்சி நிகழ்ச்சி உருவாக்கம் பற்றிய செயன்முறையின் அடிப்படையினை விபரிப்பார்.

25. தொலைக்காட்சி நிகழ்ச்சி உள்ளடக்கம் பற்றிக் கூறுவார்.

26. அச்சு ஊடகம் என்ற வகையில் பத்திரிகையின் சிறப்பம்சப் பகுதிகள் பற்றி விபரிப்பார்.

27. வகுப்பறை ஊடக உபகரணங்களைப் பயன்படுத்தும் திறன்களை வெளிப்படுத்துவார்.

28. புகைப்படமொன்றை எடுப்பதற்கு கமரா வில்லைகளைப் பொருத்தமாக உபயோகிக்கும் அறிவைக் கொண்டிருப்பார்.

29. வாய்மொழித் தொடர்பாடலின் அடிப்படை அம்சங்களைக் குறிப்பிடுவார்.

30. வானொலி நிகழ்ச்சி வகைப்பாடுகள் பற்றி கருத்துரைப்பார்.

31. செய்திப் பத்திரிகை உள்ளடகத்தை ஆய்வு செய்வார்.

32. வானொலி ஊடகத்தின் தனித்துவமான இயல்புகளைக் குறிப்பிடுவார்.

33. விமர்சனரீதியான பெறுநராகச் செயற்படுவதன் முக்கியத்துவத்தினை உறுதிப்படுத்துவார்.

34. தொலைக்காட்சி ஊடகத்தின் புதிய போக்கினைத் தேடியறிவார்.

35. படைப்பாக்க ரீதியான தொடர்பாடலின் முக்கியத்துவத்தைக் கூறுவார்.

36. அச்சு ஊடகம் என்ற வகையில் பத்திரிகையின் சிறப்பம்சப் பகுதிகள் பற்றிக் கருத்துரைப்பார்.

37. நாட்டுக்கு நேர்மையான முறையில் பங்களிப்பு செய்யும்விதமாக சமூக பிம்பத்தை கட்டியெழுப்புவற்கு ஊடகங்கள் செயற்படும் விதம் பற்றிக் கூறுவார்.

38. ஊடகங்கள் மனித உரிமைகளைப் பாதுகாக்கின்ற மற்றும் மனித கடமைகளை நிறைவேற்றக் கூடிய சமூகத்தை உருவாக்கப் பொருத்தமான முறையில் வெளியீடுகளை இனங்காண்பார்.

39. படைப்பாக்கத்திற்காகப் பிரயோகிக்கக்கூடிய பல்வேறு தேசிய வளங்களை அல்லது மூலாதாரங்களை இனங்காண்பார்.

40. விமர்சனரீதியான பெறுநராகச் செயற்படுவதன் அவசியத்தை உறுதிப்படுத்துவார்.

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**87 T I, II**

**අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2022(2023)**
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2022(2023)**
**General Certificate of Education (Ord. Level) Examination, 2022(2023)**

සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය I, II
**தொடர்பாடலும் ஊடகக் கல்வியும் I, II**
Communication and Media Studies I, II

පැය තුනයි
**மூன்று மணித்தியாலம்**
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
**மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்**
Additional Reading Time - 10 minutes

**வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

## தொடர்பாடலும் ஊடகக் கல்வியும் I

**அறிவுறுத்தல்கள் :**

※ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

※ 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

※ உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.

※ அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** பண்டைய அரசர்கள் பதவிகள் மற்றும் நிலைகளோடு அரச கட்டளைகளையும் வழங்குவது பற்றித் தொடர்பாடல் மேற்கொண்டது,
(1) அறிவித்தல் ஓலைகள் வழியிலாகும். (2) அறிவிப்புப் பலகைகள் வழியிலாகும்.
(3) கல்வெட்டுக்கள் வழியிலாகும். (4) செப்புப் பட்டயங்கள் வழியிலாகும்.

**2.** இலங்கையின் முதலாவது பிராந்திய வானொலிச் சேவை
(1) ருஹுணு சேவை ஆகும். (2) ரஜரட்டை சேவை ஆகும்.
(3) கண்டி சேவை ஆகும். (4) புலரலி சேவை ஆகும்.

**3.** தற்காலத்தில், எவரேனும் ஒருவர் வெளியிலிருந்து செய்திகளைப் பெறும்போது அதிகம் பயன்படுத்தும் வழிமுறைகள் (Channels) கொண்டிருப்பவை
(1) வெகுசன ஊடகங்களை ஆகும். (2) புலன்கள் ஐந்தினையும் ஆகும்.
(3) இணையத்தினை ஆகும். (4) செய்தி இணையத்தளங்களை ஆகும்.

**4.** கடந்தகாலச் செய்திப்பத்திரிகைகளில் வெளியை நிரப்பப் பயன்படுத்தப்பட்ட எழுத்துக்கள் தற்காலத்தில் அறியப்படுவது
(1) சித்திரிப்புக் கட்டுரைகள் என ஆகும். (2) பத்திகள் என ஆகும்.
(3) ஆசிரியர் தலையங்கங்கள் என ஆகும். (4) மென் செய்திகள் என ஆகும்.

**5.** பாடசாலை ஊடகக் கழகத்தினால் முன்னெடுக்கப்படும் 'உலகப் புன்னகை நாள்' ஞாபகார்த்த நிகழ்வில் உரையொன்றையாற்றுமாறு நீங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளீர்கள். இது எவ்வகைத் தொடர்பாடலுடன் இணைந்ததாகும்?
(1) ஆளிடைத் தொடர்பாடலுடன் (2) ஆளுள் தொடர்பாடலுடன்
(3) வெகுசனத் தொடர்பாடலுடன் (4) குழுத் தொடர்பாடலுடன்

**6.** எவ்வகைச் செய்தியை வாசிப்பதன் மூலம் பெறுநர் மிக அதிகமாகப் பொழுதுபோக்கிற்கு ஆளாகின்றார்?
(1) மென் செய்தி (2) நடப்புச் செய்தி
(3) வன் செய்தி (4) பரிச்சயமான செய்தி

**7.** இலங்கையில் தொலைக்காட்சி ஊடகம் ஆரம்பிக்கப்பட்டமையுடன் தொடர்புபட்ட ஒரு முன்னோடி
(1) டி. எம். கொலம்பகே ஆவார். (2) ஷான் விக்கிரமசிங்க ஆவார்.
(3) விக்ரர் ஐவன் ஆவார். (4) சிறிசேன விமலவீர ஆவார்.

**8.** போல் டி மெகனியரின் செய்தி முன்வைப்புச் சமன்பாட்டுடன் **தொடர்புபடாதது** பின்வருவனவற்றுள் எது?
(1) நடுநிலைத் தன்மை (2) நம்பகத் தன்மை
(3) எளிமை (4) தெளிவான தன்மை

**9.** வாய்மொழித் தொடர்பாடலில் அதிக முக்கியத்துவம் வழங்கப்படுவது
(1) வாய்க்கு ஆகும். (2) உச்சரிப்பிற்கு ஆகும்.
(3) வார்த்தைகளுக்கு ஆகும். (4) ஒலிக்கு ஆகும்.

**10.** செய்திப்பத்திரிகையொன்றின் சினிமா மற்றும் நாடகப் பக்கத்திற்குப் பொறுப்பானவர் யார்?
(1) பிரதம ஆசிரியர்
(2) பிரதி ஆசிரியர்
(3) சித்திரிப்புக் கட்டுரைகளுக்கான ஆசிரியர்
(4) செய்தி ஆசிரியர்

**11.** ஹரோல்ட் டீ. லாஸ்வெல்லின்படி, தொடர்பாடற் செயன்முறையின் சரியான வரிசைக்கிரமம்
(1) செய்தி, தொடர்பாடல் செய்பவர், வழிமுறை, பெறுநர் மற்றும் தாக்கம்
(2) தொடர்பாடல் செய்பவர், மூலம், செய்தி, பெறுநர் மற்றும் தாக்கம்
(3) மூலம், தொடர்பாடல் செய்பவர், செய்தி, பெறுநர் மற்றும் தாக்கம்
(4) தொடர்பாடல் செய்பவர், செய்தி, வழிமுறை, பெறுநர் மற்றும் தாக்கம்

**12.** அச்சுப் பிரசுரம் ஒன்றின் நீடித்ததன்மையை உறுதிப்படுத்துவதுடன் தொடர்புடைய இயந்திரம்
(1) புத்தகம் கட்டும் இயந்திரம் (2) லமினேட்டிங் இயந்திரம்
(3) லேசர் அச்சு இயந்திரம் (4) இலக்கமுறைப் பிரதியெடுக்கும் இயந்திரம்

**13.** வகுப்பின் அனைத்து 40 மாணவர்களாலும் முன்னரே விரிவாகத் தயாரிக்கப்பட்ட அறிக்கையொன்றை முன்வைப்பது வகுப்பறைப் பயிற்சியொன்றாக அமைந்திருந்தது. இதற்கு மிகப் பொருத்தமான ஊடக உபகரணம்
(1) கரும்பலகை ஆகும். (2) அறிவித்தற் பலகை ஆகும்.
(3) வெண்பலகை ஆகும். (4) பக்கம் புரட்டி ஆகும்.

**14.** இலங்கையில் தயாரிக்கப்பட்ட முதலாவது தொலைக்காட்சி நாடகம் எது?
(1) பளிங்கு மெனிகே (2) திமுது முது
(3) யசோராவய (4) கடுல்ல

**15.** இலங்கையின் ஊடகப் பயன்பாட்டில் நேரடிச் சட்டரீதியான செல்வாக்கை மேற்கொள்ளக் கூடியது எது?
(1) இலங்கைப் பத்திரிகைப் பேரவை
(2) இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
(3) இலங்கைப் பத்திரிகை ஆசிரியர்கள் சங்கம்
(4) சுயாதீன ஊடக இயக்கம்

**16.** நிலைத்த புகைப்படமொன்றைப் பதிவுசெய்வதற்கு அவசியமான கூறு எது?
(1) ஒளி (2) கணினி
(3) நினைவுப்பதிவு அட்டை (memory card) (4) புகைப்படச் சுருள்

**17.** தொலைக்காட்சி நாடகமொன்றின் ஒவ்வொரு அங்கமும் வெவ்வேறு கருப்பொருட்களில் தயாரிக்கப்படுமாக இருந்தால், அது
(1) ஓரங்க நாடகமொன்று ஆகும். (2) அளிக்கை நாடகமொன்று ஆகும்.
(3) தொடர் நாடகமொன்று ஆகும். (4) பல்வித அம்ச நாடகம் ஆகும்.

**18.** நிறுவனத்தின் பெயருடன் ஊடகத்தின் பெயர் பொருத்தமாக உள்ளடக்கப்பட்டிருக்கும் தெரிவினை அடையாளங் காண்க.
(1) லேக் ஹவுஸ் - சிலுமின
(2) ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் - வசந்தம்
(3) விஜய வெளியீட்டகம் - டெய்லி நியூஸ்
(4) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் - நெத் FM


**19.** அரச ஊடக நிறுவனங்களில் கொள்கைத் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுவது
(1) பணிப்பாளர்கள் சபையினால் ஆகும்.
(2) தலைவரினால் ஆகும்.
(3) பிரதம நிறைவேற்று அதிகாரியினால் ஆகும்.
(4) பொது முகாமையாளர்களினால் ஆகும்.

**20.** பிரச்சினையொன்று நடைபெறும்போது பதிவுசெய்யப்பட்ட குறிப்பிட்ட புகைப்படங்களை ஊடகம் வழியாக வெளியிடுவதிலிருந்து விலகியிருப்பதானது மிகப் பொருத்தமுடையதாகவிருப்பது
(1) ஊடக இரைச்சலுடன் ஆகும். (2) முரண்பாட்டுத் தீர்வுகளுடன் ஆகும்.
(3) வாயிற்காப்பு எண்ணக்கருவுடன் ஆகும். (4) ஆதிக்கம் செலுத்தும் சிந்தனைகளுடன் ஆகும்.

**21.** வெளிநாட்டுத் தொலைக்காட்சி அலைவரிசையொன்றில் இளம் ஆபிரிக்கப் பெண்ணொருவர் செய்தி வாசிப்பாளராக இருந்தார். ஆனால், அவர் அழகானவர். இந்தக் கூற்று அறநெறிக்கு மாறாக இருப்பது
(1) பால்நிலையுடன் சம்பந்தப்பட்ட எண்ணக்கருவின் பேரிலாகும்.
(2) இனவாதத்துடன் சம்பந்தப்பட்ட எண்ணக்கருவின் பேரிலாகும்.
(3) தொழில்வாண்மையுடன் சம்பந்தப்பட்ட எண்ணக்கருவின் பேரிலாகும்.
(4) பிரஜாவுரிமையுடன் சம்பந்தப்பட்ட எண்ணக்கருவின் பேரிலாகும்.

**22.** எட்வேர்ட் ஹொப்பர், டசாய் லூன், சார்ளி சாப்ளின், ஜோன் லொஜி பேர்ட் ஆகியோரின் பங்களிப்புப் பெறப்பட்ட ஊடகங்களை முறையே எடுத்துக் காட்டும் விடை எது?
(1) தொலைக்காட்சி, செய்திப்பத்திரிகைகள், சினிமா மற்றும் வானொலி
(2) வானொலி, சினிமா, தொலைக்காட்சி மற்றும் செய்திப்பத்திரிகைகள்
(3) வானொலி, செய்திப்பத்திரிகைகள், சினிமா மற்றும் தொலைக்காட்சி
(4) சினிமா, செய்திப்பத்திரிகைகள், தொலைக்காட்சி மற்றும் வானொலி

**23.** செய்தி அறிக்கையிடலில் பயன்படும் தலைகீழ் பிரமிட் மாதிரி கீழே தரப்படுகின்றது.




மேற்படி மாதிரியில் ஆகக் கூடுதலான முக்கியத்துவம் வாய்ந்த தகவலைக் கொண்டிருக்கும் பகுதி
(1) A ஆகும். (2) B ஆகும். (3) C ஆகும். (4) D ஆகும்.

**24.** தொலைக்காட்சி நிகழ்ச்சி வகைகளில் தயாரிப்பிற்கு நீண்டதொரு காலம் தேவையாகவிருக்கும் வகை
(1) அறிக்கை அல்லது விவரண நிகழ்ச்சிகள்
(2) பல்சுவை நிகழ்ச்சிகள்
(3) நடப்பு விவகார நிகழ்ச்சிகள்
(4) செய்தி நிகழ்ச்சிகள்

**25.** பின்வரும் கூற்றுகளில் கவனஞ் செலுத்துக.
A - 'கொழும்பு ஜேர்னல்' இலங்கையில் பதிப்பிக்கப்பட்ட முதலாவது செய்திப் பத்திரிகை ஆகும்.
B - செய்திப் பத்திரிகைகளின் உரிமையாண்மையானது அரசு அல்லது தனியார் அமைப்பாக இருக்க முடியும்.
C - அரசியற் செய்திப்பத்திரிகைகள் தனியார் உரிமையாண்மையைக் கொண்டிருப்பவையாகக் கருதப்படுகின்றன.
D - 'லங்கா லோகய' இலங்கையில் பதிவு செய்யப்பட்ட முதலாவது செய்திப்பத்திரிகை ஆகும்.
மேற்படி கூற்றுக்களில்,
(1) A மற்றும் B ஆகியன உண்மையானவை.
(2) A, B மற்றும் C ஆகியன உண்மையானவை.
(3) B மற்றும் C ஆகியன உண்மையானவை.
(4) B, C மற்றும் D ஆகியன உண்மையானவை.

**26.** அரச ஆளுகை தொடர்பான தகவல்களைக் கல்வெட்டுக்களில் பதிப்பிப்பது எந்த அடிப்படைத் தொடர்பாடல் வடிவத்துடன் தொடர்புபட்டது?
(1) வாய்மொழி சாராத் தொடர்பாடலுடன் ஆகும்.
(2) குழுத் தொடர்பாடலுடன் ஆகும்.
(3) எழுத்துத் தொடர்பாடலுடன் ஆகும்.
(4) ஆளிடைத் தொடர்பாடலுடன் ஆகும்.

**27.** வேறுபட்ட கேத்திரகணித வடிவங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் அடிப்படையில் பொருட்களைச் சட்டகத்தினுள் இடம்பெறச் செய்வதனால் பார்வைக்கு இசைவான புகைப்படமொன்றைப் பெறுவது
(1) குவியப்படுத்தல் (focus) என்பதாகும்.
(2) ஒளிக்காளாகுதல் / திறத்தல் (exposure) என்பதாகும்.
(3) இலக்குவைத்தல் (aiming) என்பதாகும்.
(4) உருவகப்படுத்தல் (composition) என்பதாகும்.

**28.** ஆளுள் தொடர்பாடல் பற்றிய சில கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன.
A - குறியீட்டுப் பரிமாற்றம் நிகழ்தல்.
B - வகிபாகங்கள் பரிமாறப்படுவது அவதானிக்கப்பட முடியும்.
C - பின்னூட்டம் எதிர்பார்க்கப்பட முடியும்.
D - தனக்குள் உரையாடுவதற்கான வாய்ப்புக் காணப்படுதல்.

மேற்படி கூற்றுக்களில்,
(1) A மற்றும் B ஆகியன உண்மையானவை.
(2) B மற்றும் C ஆகியன உண்மையானவை.
(3) C மற்றும் D ஆகியன உண்மையானவை.
(4) A, B, C மற்றும் D அனைத்தும் உண்மையானவை.

**29.** ஜானகி புதிதாகப் பிறந்த தனது குழந்தையின் புகைப்படமொன்றை வெளிநாட்டில் வசிக்கும் அவரது பெற்றோருக்கு பொருத்தமான வகையில் புகைப்படச் சட்டகமொன்றில் ஆக்கிக் கொள்வதற்காக அதனை அனுப்ப விரும்பினார். இதற்கு ஆகப் பொருத்தமான வழிமுறை
(1) மின்னஞ்சல் மற்றும் குறுஞ்செய்தி (2) மின்னஞ்சல் மற்றும் சாதாரண கடிதம்
(3) தொலைநகல் மற்றும் குறுஞ்செய்தி (4) தொலைநகல் மற்றும் சாதாரண கடிதம்

**30.** அசையும் படவுருக்களின் உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்திய பரீட்சார்த்த முயற்சிகளின் வரலாற்றின் சரியான வரிசைக்கிரமம்
(1) நிழல் நாடகம், மோர்ஸ் சமிக்ஞைகள், பார்வையின் தொடரறாத் தன்மை
(2) மாய எறியக் கண்ணாடி விளக்கு, பார்வையின் தொடரறாத் தன்மை, மோர்ஸ் சமிக்ஞைகள்
(3) மாய எறியக் கண்ணாடி விளக்கு, நிழல் நாடகம், மோர்ஸ் சமிக்ஞைகள்
(4) நிழல் நாடகம், மாய எறியக் கண்ணாடி விளக்கு, பார்வையின் தொடரறாத் தன்மை

**31.** ஆக்கபூர்வமான வகையில் விரிவுரையொன்றை நிகழ்த்தும்போது, ஆகக் கூடுதலான கவனம் அவசியம் செலுத்தப்பட வேண்டிய அம்சம்
(1) பார்வைக்கு இசைவான முறையில் உடையணிந்திருத்தல்
(2) விரிவுரைக்குப் பயன்படும் உபகரணங்கள் மற்றும் கருவிகள் இயக்கப்படும் விதம்
(3) நிகழ்விற்குப் பொருத்தமானவாறு அர்த்தமுள்ள பேச்சொன்றினை முன்வைத்தல்
(4) நல்ல கண் தொடர்பொன்றினைப் பேணுதல்

**32.** உளத்தில் காட்சித்தோற்றங்களை உருவாக்கக்கூடிய மொழியொன்றின் வகைப்பாடு ஆகப் பயன்தரக்கூடியது
(1) செய்திப்பத்திரிகை சித்திரிப்புக் கட்டுரை எழுத்தாளருக்கு ஆகும்.
(2) தொலைக்காட்சிச் செய்தி வாசிப்பாளர் ஒருவருக்கு ஆகும்.
(3) வானொலி வர்ணனையாளருக்கு ஆகும்.
(4) நாடக அரங்காற்றுகை நடிகருக்கு ஆகும்.

**33.** 'வானொலி நிகழ்ச்சிகள் ஒரு தடவை மாத்திரம் செவிமடுக்கக் கூடியவை.' இது அர்த்தம் தருவது
(1) சிக்கலான விடயங்கள் முன்வைக்கப்பட முடியும் என்பதனை ஆகும்.
(2) ஒலியானது ஊடகமாக மாறுகின்றது என்பதனை ஆகும்.
(3) ஒலிபரப்பின்போது அர்த்தம் அவசியம் உள்வாங்கப்பட வேண்டும் என்பதனை ஆகும்.
(4) வானொலி ஓர் கற்பனாவாக்க ஊடகம் என்பதனை ஆகும்.

**34.** ஊடகச் செயற்பாடுகளில் அரசாங்கத்தின் நேரடித் தலையீடு காணப்பட முடியாதது
(1) அலைவரிசைகளுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுதலில் ஆகும்.
(2) அவசரகாலச் சட்டத்தின்கீழ் செய்திகள் கட்டுப்படுத்தப்படுதலில் ஆகும்.
(3) வெகுசன ஊடக நிறுவனங்களைத் தடைசெய்தலில் ஆகும்.
(4) ஒழுக்கநெறிக் கோவைகளை வெளியிடுதலில் ஆகும்.

**35.** புதிய ஊடகங்களை மாத்திரம் கொண்டிருக்கும் தெரிவு
(1) வாட்ஸ் அப், முகநூல், தொலைக்காட்சி, மின்னஞ்சல்
(2) குறுஞ்செய்தி, முகநூல், வானொலி, தொலைக்காட்சி
(3) முகநூல், வாட்ஸ் அப், மின்னஞ்சல், குறுஞ்செய்தி
(4) குறுஞ்செய்தி, வானொலி, வாட்ஸ் அப், முகநூல்

**36.** பிரதான வீதியை நோக்கியிருக்கும் சனசஞ்சாரம் மிக்க பகுதியில் உள்ள தனது வீட்டின் முன்பக்கத்தில் கண்காணிப்புக் கமெரா (CCTV) ஒன்றினைப் பொருத்த ரவி தீர்மானித்தார். அதன்மூலம் கிடைக்கப் பெறக்கூடிய பிரதான ஆதாயம்
(1) செய்தி அறிக்கைகளுக்கு விபத்துக்கள் பற்றிய காட்சிகளை வழங்குதல் ஆகும்.
(2) நேரத்திற்கு நேரம் சூழல் மாற்றங்கள் பற்றிய அறிகைகளைப் பெறுதல் ஆகும்.
(3) பயணஞ்செய்வோரை கவனமாக அவதானித்தல் ஆகும்.
(4) அவரது வீட்டின் பாதுகாப்புத் தொடர்பான நம்பகரமான தகவல்களைப் பெறுதல் ஆகும்.

**37.** எழுத்துத் தொடர்பாடலில் படைப்பாக்கம் அற்ற ஒரு தொடர்பாடல் வழிமுறை
(1) வரைபடங்கள் ஆகும். (2) பாவனைகள் ஆகும்.
(3) எழுத்துரு வகைகள் ஆகும். (4) அட்டவணைகள் ஆகும்.

**38.** செயற்படாப் பெறுநர்கள் தொடர்பிலான சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) ஊடகச் செய்திகள் யதார்த்தத்தைப் பிரதிபலிப்பன என நம்புதல்
(2) ஊடகங்களுடன் மிக நெருங்கிய தொடர்பிணைப் பேணுதல்
(3) ஊடகவியலாளர்களையும், ஊடக உள்ளடக்கங்களையும் எப்போதும் ஆர்வத்துடன் பாராட்டிக் கொள்ளல்
(4) சமூகத்தில் எப்போதும் பெரும்பான்மையைப் பிரதிநிதித்துவம் செய்தல்

**39.** பின்வரும் அம்சங்களைக் கவனத்திற்கொள்க.

A - வாயிற்காப்பாளர் ஒருவர் காணப்படுதல்
B - தொழில்சார் தொடர்பாடுநர்களின் பிரசன்னம்
C - தொழில்நுட்ப முறைகள் பயன்படுத்தப்படல்
D - தொடர்பாடுநர்களும் பெறுநர்களும் நேருக்கு நேராகச் சமூகமளித்தல்

மேற்படி அம்சங்களில், வெகுசன ஊடகங்களுடன் தொடர்புபடாத கூற்றுகளாவன
(1) A மற்றும் B ஆகியன மாத்திரம் ஆகும்.
(2) A மற்றும் D ஆகியன மாத்திரம் ஆகும்.
(3) B மற்றும் C ஆகியன மாத்திரம் ஆகும்.
(4) C மற்றும் D ஆகியன மாத்திரம் ஆகும்.

**40.** பின்வரும் சந்தர்ப்பங்களைக் கவனத்திற்கொள்க.

A - ஏரியொன்றின் ஓரத்தில் அமைந்திருக்கும் ஆலயமொன்றின் காட்சியொன்று.
B - முகத்தில் உள்ள பிறப்பு அடையாளமொன்று.
C - செய்தி வாசிக்கும் ஒரு சந்தர்ப்பம்.
D - ஒரு நடனக் கலைஞர் தனது உடலை இசைவுடன் அசைக்கும் சந்தர்ப்பமொன்று.

மேற்படி சந்தர்ப்பங்களை அர்த்தமுடன் முன்வைக்கும் பொருத்தமான சட்டகங்களின் (frames) சரியான தொடர் வரிசையைக் கொண்ட விடையைத் தெரிவுசெய்க.
(1) மிக நீண்ட எடுப்பு, மிக அண்மித்த எடுப்பு, நடுத்தர எடுப்பு, நீண்ட எடுப்பு
(2) நீண்ட எடுப்பு, நடுத்தர எடுப்பு, மிக அண்மித்த எடுப்பு, மிக நீண்ட எடுப்பு
(3) நடுத்தர எடுப்பு, மிக அண்மித்த எடுப்பு, நீண்ட எடுப்பு, மிக நீண்ட எடுப்பு
(4) மிக நீண்ட எடுப்பு, நடுத்தர எடுப்பு, மிக அண்மித்த எடுப்பு, நீண்ட எடுப்பு

* *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස (සා.පෙළ) විභාගය / க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2022 (2023)

විෂය අංකය / பாட இலக்கம்: **87**

විෂයය / பாடம்: **தொடர்பாடலும் ஊடகக் கல்வியும்**

## ලකුණු දීමේ පටිපාටිය / புள்ளி வழங்கும் திட்டம்
## I පත්‍රය / பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 01 | 11. | 04 | 21. | 02 | 31. | 03 |
| 02. | 02 | 12. | 02 | 22. | 03 | 32. | 03 |
| 03. | 02 | 13. | 04 | 23. | 01 | 33. | 02 |
| 04. | 02 | 14. | 02 | 24. | 01 | 34. | 04 |
| 05. | 04 | 15. | 01 | 25. | 02 | 35. | 03 |
| 06. | 01 | 16. | 01 | 26. | 03 | 36. | 04 |
| 07. | 02 | 17. | 03 | 27. | 04 | 37. | 02 |
| 08. | 03 | 18. | 01 | 28. | 04 | 38. | 04 |
| 09. | 03 | 19. | 01 | 29. | 02 | 39. | 02 |
| 10. | 03 | 20. | 03 | 30. | 04 | 40. | 01 |

✪ විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට / ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் 1 x 40 = 40

# விடைத்தாள் வினாக்களும் தொடர்புடைய கற்றற்பேறுகளும்
# 87 - தொடர்பாடலும் ஊடகக் கல்வியும்

## பகுதி II

01.

1. மனிதன் எழுத்துமூலத் தொடர்பாடலுடன் இணைந்தமை பற்றி எடுத்துக்காட்டுவார்.
2. பூகோளரீதியான தகவல் பரிமாற்றத்தை முக்கியத்துவப்படுத்திக் கருத்துரைப்பார்.
3. கணினி வெளியீட்டுச் செயலொழுங்கின் அவசியத்தைக் குறிப்பிடுவார்.
4. தகவல் பரிமாற்றத்திற்கு தொலைபேசியைச் சரியாகப் பயன்படுத்துவார்.
5. சரியான தொழிநுட்ப உத்திகளைக் கையாண்டு ஒளிப்படம் பிடிப்பார்.
6. அச்சு ஊடகங்களில் நிலைத்த புகைப்படப் பாவனை இடம்பெறும் விதத்தை விபரிப்பார்.
7. தகவல் சேகரிக்கும் நுட்பமுறைகள் பற்றிக் குறிப்பிடுவார்.
8. செய்திப் பெறுமதியில் தாக்கம் செலுத்தும் காரணிகள் பற்றிக் கருத்துரைப்பார்.
9. வானொலி நிகழ்ச்சிகளின் தயாரிப்பிற்கு அவசியமான ஒழுங்கமைப்பு உபாய வழிகளைக் கூறுவார்.
10. தொலைக்காட்சி ஊடகத்தின் இயல்புகளை இனங்காண்பார்.

02.

1. குழுத்தொடர்பாடல் நடைபெறும் பல்வேறு சந்தர்ப்பங்களின்போது தொடர்பாடல் செயன்முறை நடைபெறும் முறைமைகள் பற்றி விபரிப்பார்.
2. தொடர்பாடலின் அடிப்படைச் செயற்பாடுகளை விபரிப்பார்.
3. வெகுசனத் தொடர்பாடலின் தனித்துவமான இயல்புகளை இனங்கண்டு முன்வைப்பார்.
4. விமர்சனரீதியான பெறுநராகச் செயற்படுவதன் முக்கியத்துவத்தை உறுதிப்படுத்துவார்.

03.

1. வெகுசனத் தொடர்பாடலுக்காகப் பயன்படுத்தப்படும் வகைப்பாட்டுப் பிரயோகங்களை முன்வைப்பார்.
2. தொடர்பாடல் என்பதை வெவ்வேறு அர்த்தப்பாடுகளுடன் முன்வைப்பார்.
3. அலுவலகத்தில் பயன்படுத்தப்படும் ஊடக உபகரணங்களை இனங்காண்பார்.
4. வெகுசன ஊடகம் மற்றும் புதிய ஊடக வேறுபாடுகளை ஆராய்வார்.

04.

1. இலங்கையின் பல்வேறு ஊடக நிறுவனங்களின் உரிமையாண்மைத் தன்மைகளுக்கேற்ப ஊடக நிறுவனங்கள் தொடர்பாகத் தகவல் வழங்குவார்.
2. தகவல் முன்வைப்பின் பல்வேறு முறைகள் பற்றி விபரிப்பார்.
3. ஊடக நிறுவனங்களின் குறிக்கோள்களுக்கிணங்க அவற்றின் ஊடகச் செயற்பாட்டாளர்களின் தன்மை பற்றிக் கூறுவார்.
4. பத்திரிகைஉள்ளடக்கத்தைக்கருத்திற்கொண்டுஅல்லதுஉபயோகித்துவடிவமைப்பைப்பிரயோகத்திறனுடன் மேற்கொள்வார்.

05.

1. தொடர்பாடல் செயன்முறையில் கட்புல - செவிப்புலத் தொடர்பாடல் முறைமைகளைப் பொருத்தமாகப் பயன்படுத்துவார்.
2. தொலைக்காட்சி ஊடகத்தின் இயல்புகளை இனங்காண்பார்.
3. பல்வேறு கட்புல வெளியீட்டு ஊடக விதிகளை ஆக்குவதற்காகப் பிரயோகிக்கக்கூடிய முறைகளை இனங்காட்டுவார்.
4. தொடர்பாடல் செயன்முறையில் தொடர்புறும் பெறுநர் பல்வகைமை பற்றி விபரிப்பார்.

06.

1. ஊடக வெளியீடுகளைத் தயாரிப்பதுடன் அவை தொடர்பான ஒழுக்கவிதிகளையும், சட்டதிட்டங்களையும் பின்பற்றுவார்.
2. பத்திரிகை ஊடக உள்ளடக்கத்தை விபரிப்பார்.
3. வானொலி நிகழ்ச்சிப் பாகுபாடுகளை மற்றும் உள்ளடக்கங்களை ஆராய்வார்.
4. வாய்மொழித் தொடர்பாடலை விருத்தி செய்துகொள்ளக்கூடிய பல்வேறு உபாய வழிமுறைகளை முன்வைப்பார்.

07.

1. வெகுசன ஊடகங்களால் சமூக பங்களிப்பு நடைபெறும் முறைமையை விளக்குவார்.
2. ஊடக ஆக்கம் மற்றும் சட்டங்களை எடுத்துரைப்பார்.
3. ஊடகம் என்ற வகையில் செய்தித்தாளின் முக்கியத்துவத்தை இனங்காட்டுவார்.
4. வானொலி நிகழ்ச்சிகளின் வெற்றிக்குக் காரணமாகும் படைப்பாக்கரீதியான பண்புகளை இனங்காட்டுவார்.

# தொடர்பாடலும் ஊடகக் கல்வியும் II

* முதலாம் வினாவையும் வேறு ஏவையேனும் நான்கு வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* முதலாம் வினாவுக்கு 20 புள்ளிகளும் ஏனைய எல்லா வினாக்களுக்கும் 10 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

1. திறன்பேசி (smartphone) ஓர் பல்செயற்பாட்டுக் கருவியாகும்.

(i) ஆளிடைத் தொடர்பாடலுக்கு அது பயன்படுத்தப்படும் சந்தர்ப்பமொன்றைக் குறிப்பிடுக.

திறன் தொலைபேசியைப் பயன்படுத்தி இருவர் தொடர்பாடலில் ஈடுபடும் சந்தர்ப்பம்

உதாரணம் :- மின்னஞ்சல் (Email), குறுஞ்செய்தி (SMS)

(2 புள்ளிகள்)

(ii) மாநாட்டு அழைப்பொன்றில் (conference call) பங்கேற்க வேண்டிய ஆகக் குறைந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை யாது?

மூன்று பேர் (2 புள்ளிகள்)

(iii) தொலைபேசி அழைப்பொன்றை மேற்கொள்ளும்போது பயன்படும் தொடர்பாடல் வடிவங்கள் இரண்டினைப் பெயரிடுக.

வாய்மொழித் தொடர்பாடல், செவிப்புலத் தொடர்பாடல், கட்புலத் தொடர்பாடல், முறைசார் தொடர்பாடல், முறைசாராத் தொடர்பாடல் (2 புள்ளிகள்)

(iv) ஆவணப்படுத்தப்பட்ட தகவலை அனுப்புவதற்குத் திறன்பேசியொன்று பயன்படக்கூடுமான இரண்டு சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.

- மின்னஞ்சல் (Email)
- குறுஞ்செய்தி (SMS)
- வைபர் (Viber)
- வட்ஸ் அப் (WhatsApp)
- ருவிட்டர் (Twitter)

பிரயோகங்களைப் பயன்படுத்தி நிகழ்த்தப்படும் தகவல் பரிமாற்றச் சந்தர்ப்பங்கள் இரண்டைக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

(2 புள்ளிகள்)

(v) வெகுசனத் தொடர்பாடலுக்கு திறன்பேசி பயன்படுத்தப்படக் கூடுமான இரண்டு வழிகளை எழுதுக.

- பத்திரிகையை வாசிப்பதற்கு
- வானொலியைச் செவிமடுப்பதற்கு
- தொலைக்காட்சியைப் பார்வையிடுவதற்கு

(2 புள்ளிகள்)

(vi) நண்பரொருவர் மேற்கொண்ட தொலைபேசி அழைப்பிற்கு நீங்கள் பதிலளிக்கும்போதான சந்தர்ப்பமொன்றுடன் தொடர்புபடும் தொடர்பாடல் கூறு யாது?

பின்னூட்டம் / எதிர்வினை (2 புள்ளிகள்)

(vii) திறன்பேசிவழி புகைப்படங்களை எடுக்கும்போது, தரவுகள் நினைவு அட்டையில் (memory card) சேமிக்கப்பட முடியும். தனிவில்லைத் தெறி கமெரா (SLR) ஒன்றினால் புகைப்படங்கள் எடுக்கப்படும்போது எதனில் தரவுகள் சேமிக்கப்படும்?

புகைப்படச் சுருள் (2 புள்ளிகள்)

(viii) நினைவு அட்டையில் சேமிக்கும் புகைப்படங்களின் எண்ணிக்கையைத் தீர்மானிக்கும் அம்சங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

- புகைப்படத்தைக் களஞ்சியப்படுத்துவதற்கு ஒதுக்கப்படும் இடத்தின் அளவு
- நினைவக அட்டையின் கொள்ளளவு

உதாரணம்: Kilo Bites, Giga Bites, Mega Bites

தொழில்நுட்பச் சொற்களைப் பயன்படுத்திப் பதிலளித்திருத்தல் வேண்டும்.

உதாரணம்: Pixels, Resolution (2 புள்ளிகள்)

(ix) திறன்பேசியொன்றினைப் பயன்படுத்தி வெகுசன ஊடகங்களுக்கான தகவல்களை அனுப்பலாம். இங்கு செயற்படுத்தப்படும் ஊடகவியலின் வகை எவ்வாறு அழைக்கப்பட முடியும்?

- பிரஜைகள் ஊடகவியல் (Citizen Journalism)

(2 புள்ளிகள்)

(x) திறன்பேசியொன்றைப் பயன்படுத்தி வெவ்வேறு வெகுசன ஊடகங்கள் ஒரே தளத்தில் செயற்பட முடியும். இந்த எண்ணக்கருவை அறிமுகப்படுத்த உதவும் பதம் யாது?

ஊடகக் குவிகை

(2 புள்ளிகள்)

**(மொத்தப் புள்ளிகள் 2 × 10 = 20 புள்ளிகள்)**

**2.** (i) அரசிற்கு உரிமையான செய்திப்பத்திரிகை நிறுவனமொன்றைப் பெயரிடுக.

ஏரிக்கரைப் பத்திரிகை நிறுவனம் ( Lake House - Associate Newspapers Ceylon Ltd.) (1 புள்ளி)

(ii) மேலே (i) இல் குறிப்பிட்ட நிறுவனத்திற்காக உத்தியோகபூர்வ மின்னஞ்சல் ஒன்றைப் பெறுவதனூடாகப் பெறப்பட முடியுமான பயன்கள் **இரண்டினைக்** கூறுக.

- வினைத்திறனுடன் செயலாற்றலாம்.
- நேர முகாமைத்துவம்.
- செலவு குறைவு
- உடனடிப் பின்னூட்டத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.
- அதிக எண்ணிக்கையிலான பெறுநர்களுக்கு ஒரே நேரத்தில் தகவலை வழங்கலாம்.
- கட்புல மற்றும் செவிப்புலத் தகவல்களைப் பரிமாற்றிக கொள்ளலாம்.
- இரகசியத்தன்மை பேணப்படும் மற்றும் தகவல் பாதுகாப்பு
- நிறுவனத்தின் உத்தியோகபூர்வ தகவல் பரிமாற்றமாகக் காணப்படும். (2 புள்ளிகள்)

(iii) செய்திப் பத்திரிகையொன்றில் பின்வரும் தனிநபர்கள் / பிரிவுகள் கொண்டிருக்கும் வகிபங்குகளைச் சுருக்கமாக விபரிக்குக.
(அ) பிரதம ஆசிரியர்
(ஆ) ஆசிரியர் பீடம்
(இ) விளம்பரப் பிரிவு

**(அ) பிரதம ஆசிரியர்**

- செய்திப்பத்திரிகையின் பிரதான ஊடகவியலாளர்.
- பத்திரிகையின் உள்ளடக்கம், கட்டமைப்புத் தொடர்பாக முழுப் பொறுப்பு வகிப்பவர்
- ஆசிரியர் தலையங்கம் எழுதுதல்
- நிறுவனத்தின் சட்டரீதியான நடவடிக்கைகளுக்குப் பொறுப்பானவர்.
- தனக்குக் கீழ் பணியாற்றும் ஊடகவியலாளர்களுக்குரிய பணிகளைப் பகிர்ந்தளித்தல்.

**(ஆ) ஆசிரியர் பீடம்**

- செய்திப்பத்திரிகையின் உள்ளடக்க வடிவமைப்பை மேற்கொள்தல்.
- பிரதேச ஊடகவியலாளர்கள் வழியாக கிடைக்கின்ற செய்திகளைச் செம்மையாக்கம் செய்தல்.
- செய்தி ஆசிரியர் / பிரதம உதவி ஆசிரியர் ஆசிரியர்பீடத்தின் தலைமைப் பொறுப்பில் இருப்பார்.
- செய்திப்பத்திரிகையின் இடஒதுக்கீடு மற்றும் செய்திகளின் முக்கியத்துவத்திற்கேற்ப செய்திகளைப் பிரசுரித்தல்.
- செய்திகளுக்குப் பொருத்தமாகத் தலைப்பிடல்.

**(இ) விளம்பரப் பிரிவு**

- செய்திப்பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்கள் தொடர்பில் தீர்மானித்தல்.
- செய்திப்பத்திரிகைக்குரிய பிரதான வருமானத்தை ஈட்டிக் கொடுக்கும் பகுதி.
- செய்திப்பத்திரிகையின் முக்கியமான பிரிவு.
- ஆசிரியர்பீடத்துடன் நேரடித் தொடர்பைக் கொண்டது.
- விளம்பரம் இடம்பெறும் பக்கம், முக்கியத்துவம், நிறம். அளவு மற்றும் வகை அடிப்படையில் விளம்பரக் கட்டணங்களைத் தீரமானித்தல்.

(3 புள்ளிகள்)

(iv) செய்திப்பத்திரிகையொன்றின் உள்ளடக்கத்துடன் தொடர்புடைய பின்வரும் விடயங்களின் பயன்பாட்டை விளக்குக.

(அ) சித்திரிப்புக் கட்டுரைகள்

(ஆ) கார்ட்டூன்

(இ) பத்திகள்

(ஈ) புகைப்படங்கள்

**(அ) சித்திரிப்புக் கட்டுரைகள்**

- இயற்கை, சூழல், அபிவிருத்தி, பொருளாதாரம், பொழுதுபோக்கு, புதிய கண்டுபிடிப்புகள் போன்ற எத்துறைகள் சார்ந்ததாகவும் கட்டுரை அமையலாம்.
- ஓய்வுநேரத்தில் வாசித்து இரசிக்கக் கூடியது.
- அசாதாரண அல்லது விஷேட தகவல்களைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக அமைந்திருக்கும்.
- சித்திரிப்புக் கட்டுரைகளில் செய்திப்பெறுமானங்களும் காணப்படும்.
- படைப்பாக்கரீதியில் கட்டுரைகள் முன்வைக்கப்படும்.
- உரையாடல், வர்ணனை, விமர்சனம் போன்ற பல்வேறு வடிவங்களில் எழுதப்படலாம்.
- வாசகரின் இரசனைக்கேற்பக் கட்டுரைகள் எழுதப்படும்.
- படைப்பாக்கரீதியான மொழி பயன்படுத்தப்பட்டிருக்கும்.

(ஆ) கார்ட்டூன்

- நகைச்சுவை மற்றும் அங்கதச் சுவை மிகுந்த படைப்பாக்கம்.
- காலத்தின் பொருத்தமான வெளிப்பாடு அல்லது முதல் நாள் இடம்பெற்ற முக்கிய செய்தி போன்றன இதன் கருப்பொருளாக அமையும்.
- குறியீடுகளைப் பயன்படுத்தி பல்வேறு பாத்திரங்கள் மற்றும் இடங்கள் என்பன சித்திரிக்கப்படும். அக்குறியீடுகள் வழியாகச் சித்திரிக்கப்படும் நபர்கள் மற்றும் இடங்கள் வாசகர்களால் உய்த்துணரப்படும்.
- அங்கதச் சுவை மிகுந்த படைப்பாக்கம் வழியாக சமூகச் செயற்பாடுகள் விமர்சனத்திற்கு உள்ளாக்கப்படும்.
- மிகவும் சிக்கலான சமூகக் கருத்தியல்களும் எளிமையான முறையில் குறியீடுகள் மூலம் முன்வைக்கப்படும்.

**(இ) பத்திகள்**

- படைப்பாக்கபூர்வமான ஆக்கம்.
- செய்திப்பத்திரிகைகளின் இடைவெளிகளை நிரப்பப் பயன்படுத்தப்பட்ட எழுத்துக்கள் (ஆரம்ப காலங்களில்)
- சமகால நடப்புச்செய்திகளை அறிக்கையிடச் சிறந்தமுறை.
- தொழில்சார் ஊடகவியலாளர்கள், நிபுணத்துவம் மிக்கவர்கள் மற்றும் சமூகம் தொடரபான விமர்சனரீதியான பார்வையுள்ளவர்களால் படைப்பாக்கரீதியாக எழுதப்படுதல்.
- படைப்பாளியின் மொழிவாண்மைக்கேற்ப பத்தி எழுத்துக்கள் வேறுபடும்.
- பல்வேறு கருப்பொருட்களில் பத்தி எழுத்துக்கள் எழுதப்படும்.

**(இ) புகைப்படங்கள்**

- வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதவற்றைப் புகைப்படம் ஊடாக வெளிப்படுத்தலாம்.
- புகைப்படங்களுடன் அதனைச் சொல்லும் விளக்கங்கள் (புகைப்படக் குறிப்புக்கள்) எழுத்து வடிவில் சேரும்பொழுது இலகுவாகச் செய்தியைப் புரிந்துகொள்ள முடியும்.
- புகைப்படங்களை மாத்திரம் பயன்படுத்திச் செய்தியொன்றை வெளியிடலாம்.
- செய்தி, சிறப்புக்கட்டுரைகள் மற்றும விளம்பரங்களுக்காகப் புகைப்படங்களைப் பயன்படுத்தலாம்.
- செய்திப்பத்திரிகையின் கவருந்தோற்றத்திற்குப் புகைப்படங்கள் காரணமாகுதல்.
- விளங்கறிவற்ற ஒருவராலும் புகைப்படங்கள்வழியாகச் செய்தியை அறிந்துகொள்ளமுடியுமாக இருத்தல்.

மேற்காணும் நான்கு காரணிகளுக்கூடாக விபரிக்கப்பட்டிருந்தால் மாத்திரம் முழுப்புள்ளிகள் வழங்குக. பெயரிட்டிருந்தால் ஒரு புள்ளி மாத்திரம் வழங்குக.

(4× 1 புள்ளி = 4 புள்ளிகள்)

**3.** (i) எவ்வழிமுறையைப் பயன்படுத்துவதன் மூலம் அலுவலகமொன்றில் சாதாரண அச்சு இயந்திரத்தினால் அதன் பணி நிறைவேற்றப்பட முடியும்?

- கணினி வெளியீட்டுச் செயலொழுங்கு (DTP செயலொழுங்கு) (1 புள்ளி)

(ii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்ட வழிமுறையின் ஆதாயங்கள் இரண்டினைச் சுருக்கமாக அறிமுகப்படுத்துக.

- செலவு குறைவு .
- நம்பகத்தன்மை.
- துரிதத் தன்மை.
- எளிமையானது.
- வினைத்திறன் கொண்டது.

ஆதாயங்கள் இரண்டினையும் குறிப்பிட்டிருந்தால் ஒரு புள்ளியும் விளக்கம் கொடுக்கப்பட்டிருந்தால் மாத்திரம் முழுப் புள்ளிகளையும் வழங்கவும்.

முதலாவது வினாவுக்குரிய சரியான விடையளிக்கப்பட்டிருந்தால் மாத்திரம் இரண்டாவது வினாவுக்குப் புள்ளிகள் வழங்குக. (2 புள்ளிகள்)

(iii) கணினியொன்றுக்கு இணையவழித் தொடர்பை வழங்குவதன் மூலம் இணையத்தளமொன்றினை உருவாக்க முடியும். இணையத்தளமொன்றைப் பயன்படுத்துவதன் ஆதாயங்கள் **மூன்றினைச்** சுருக்கமாக விபரிக்குக.

- அலுவலகத் தகவல்களை உடனடியாக இணையத்தளத்தில் இடுவதன் மூலம் உலகின் எந்த மூலையிலிருந்தும் அத்தகவல்களைப் பார்வையிடலாம்.
- அலுவலகத் தகவல்களை இற்றைப்படுத்தலாம்.
- அலுவலகத்தின் விபரங்களைச் சமூகத்தின் பார்வைக்கு ஒப்புவித்தல்.
- அலுவலக விபரங்களைக் களஞ்சியப்படுத்தலாம்.
- அலுவலக நடவடிக்கைகளை நேர்த்தியாகவும் ஒழுங்குமுறையிலும் செய்யக்கூடியதாக இருத்தல்
- பெறுநர்களின் துலங்கல்களை உடனடியாகப் பெற்றுக் கொள்ள முடியும். (3 புள்ளிகள்)

(சுருக்கமாக விபரித்திருந்தால் மாத்திரம் முழுப் புள்ளிகள் வழங்குக. பெயரிட்டிருந்தால் 1 புள்ளி வழங்குக.)

(iv) இணையத் தொடர்புடனான கணினியொன்று இலத்திரனியல் செய்திப்பத்திரிகையொன்றை வாசிப்பதற்குப் பயன்படுத்தப்பட முடியும். இலத்திரனியல் பத்திரிகையொன்றின் அடிப்படைப் பண்புகள் **நான்கினை** விளக்குக.

- உடனடியாகதச் செய்திகளைத் அறிந்துகொள்ளக்கூடிய வசதி.
- களஞ்சியப்படுத்தக் கூடிய வசதி.
- மீண்டும் மீண்டும் வாசிக்கும் வசதி.
- செய்திகள் வெவ்வேறு தலைப்புகளின்கீழ் வகைப்படுத்தப்பட்டுப் பிரசுரிக்கப்பட்டிருத்தல்.
- இற்றைப்படுத்தும் (Update) வசதி காணப்படல்.
- பயநர்களின் பின்னூட்டம் உடனடியாகக் கிடைத்தல்.
- ஒரு தகவலிலிருந்து இன்னுமொரு தகவலுக்குச் செல்லும் வசதி (Hypertext) காணப்படல்.
- பிரதி எடுக்கும் மற்றும் தரவிறக்கம் செய்யும் வசதி காணப்படல்.
- தேவையான தகவல்களை பகிர்ந்துகொள்ளக்கூடிய (PDF/ Document) வசதி காணப்படல்.

(4 புள்ளிகள்)

(நான்கு பண்புகளும் சுருக்கமாக விபரிக்கப்பட்டிருந்தால் மாத்திரம் முழுப் புள்ளிகள் வழங்குக. பெயரிட்டிருந்தால் 1 புள்ளி வழங்குக.)

4. (i) வானொலி ஊடகத்தின் அடிப்படைத் தொடர்பாடல் வடிவம் எது?

- செவிப்புலத் தொடர்பாடல் வடிவம் (1 புள்ளி)

(ii) வானொலியில் பயன்படுத்தப்படக் கூடுமான வெளியக ஒலி விளைவுகள் (external sound effects) இரண்டினைப் பெயரிடுக.

- மனிதக்குரல் ஒலி, இயற்கை ஒலி, இசைக் கருவிகள் மூலம் இசைக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட ஒலி.

(2 புள்ளிகள்)

(iii) வானொலி ஊடகத்தில் பயன்படுத்தப்படும் பின்வரும் நிகழ்ச்சி வகைகளைச் சுருக்கமாக அறிமுகப்படுத்துக.
(அ) கதை / நிகழ்ச்சிகள்
(ஆ) நேர்காணல்கள்
(இ) சஞ்சிகை நிகழ்ச்சிகள்

**(அ) கதை நிகழ்ச்சிகள்**

- தனி ஒரு நபரால் மேற்கொள்ளப்படும் வாய்மொழித் தொடர்பாடல் இதுவாகும்.
- மிகவும் பழைமையான நிகழ்ச்சி இதுவாகும்.
- பல்சுவை அம்சங்கள் காணப்படாததால் செவிமடுப்போரைத் தக்கவைப்பது சவால்மிக்கது.

(01 புள்ளி)

**(ஆ) நேர்காணல்**

- புதிய தகவல்களைக் கொண்டுவரும்.
- புதிய கருத்துக்களை/ எண்ணங்களை உருவாக்கக்கூடிய நிகழ்ச்சி.
- தொகுப்பாளர் கேள்வி கேட்க, நிகழ்ச்சிக்கு அழைக்கப்பட்டவர் விடையளிப்பவராக இருப்பார்.
- இலகுவானதும் தெளிவானதுமான மொழியில் நேர்காணல் இடம்பெறும்.
- தொலைபேசி அழைப்புகள் மூலம் பெறுநர்கள் இந்நிகழ்ச்சியில் இணைந்துகொள்ள முடியும்.

(02 புள்ளிகள்)

**(இ) சஞ்சிகை நிகழ்ச்சிகள்**

- பல்வேறு தலைப்புகளைக் அடிப்படையாகக் கொண்டு நடத்தப்படும்.
- பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஒன்றுடனொன்று தொடர்புபட்ட பல தலைப்புகள் காணப்படும்.
- பல்சுவைத் தகவல்களும் முன்வைக்கப்படும்.
- ஒவ்வொரு தலைப்புக்குமான ஒலி வடிவம் வேறுபட்டது.
- பல்வேறு நிகழ்ச்சி வடிவங்களைக் கொண்டது.

(3 புள்ளிகள்)

(மூன்று நிகழ்ச்சிகளும் விபரிக்கப்பட்டிருந்தால் மாத்திரம் முழுப் புள்ளிகள் வழங்குக.)

(iv) வானொலி நேயர் விமர்சனத்திறனுள்ள பெறுநராக இருப்பது அவசியமாகும். விமர்சனத்திறனுள்ள பெறுநரிடத்தில் அவசியம் இருக்க வேண்டிய திறன்கள் நான்கினை ஆய்ந்தறிக.

- வெகுசன ஊடகத்தின் வழியாக முன்வைக்கப்படுகின்ற விடயங்களை சரியாக விளங்கிக் கொள்ளும் திறன்
- ஊடகத்தினூடாக மறைக்கப்படுபவை எவையென்பதை விளங்கிக் கொள்ளும் திறன்.
- வெகுசன ஊடகங்கள் எந்தக் குறிக்கோள்களுடன் செயற்படுகின்றன என்பதைப் புரிந்துகொள்ளும் திறன்.
- வெகுசன ஊடகங்களினால் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் தன்னை எத்தகைய நபராக ஆக்குகிறது என்பதை நன்கு விளங்கிக் கொள்ளும் ஆற்றல்.
- பெறுநரைத் தூண்டுவதற்காக ஊடகங்களால் மேற்கொள்ளப்படும் தந்திரோபாயங்களை விளங்கிக் கொள்வதற்கான திறன்கள்
- ஊடகங்கள் எவ்வாறான தகவலை வழங்கியபோதும் தமக்குத் தேவையானவற்றை மாத்திரம் வடிகட்டிப் பெற்றுக்கொள்ளும் திறன்
- ஊடகச் செயற்பாடுகள் தொடர்பாக தமது எதிர்வினையைத் தனிப்பட்ட ரீதியிலும் ஒழுங்கமைப்பு ரீதியாகவும் ஊடகங்களுக்கு முன்வைப்பதனூடாக ஊடகங்களுடன் இடைத்தொடர்பினைப் பேணுவதற்குரிய ஆற்றல்களைக் கொண்டிருத்தல்.

(4 புள்ளிகள்)

(நான்கு திறன்களும் விபரிக்கப்பட்டிருந்தால் மாத்திரம் முழுப் புள்ளிகள் வழங்குக. பெயரிட்டிருந்தால் 1 புள்ளி வழங்குக.)

**5.** (i) ஒவ்வொரு தனிநபரும் சுதந்திரமாக வாழ்வதற்குக் கொண்டிருக்கும் உரிமையை ஏற்றுக்கொண்ட, ஐக்கிய நாடுகள் சபையினால் வெளியிடப்பட்ட ஆவணத்தின் பெயர் என்ன?

- சர்வதேச மனித உரிமைகள் சாசனம் / பிரகடனம் (1 புள்ளி)

(ii) சமூகப் பிம்பங்களைக் கட்டமைப்பதற்காக வெகுசன ஊடகங்களால் எளிதாகப் பயன்படுத்தப்படும் இரண்டு பிரபல்யமிக்க வகையினரைப் பெயரிடுக.

- நடிகர்கள், விளையாட்டு வீரர்கள், அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள் (1 X 2 = 2 புள்ளிகள்)

(iii) பின்வரும் மூன்று கருப்பொருட்களுடன் தொடர்புடைய அழகியற் பிரதிநிதித்துவத்தை விளக்குக.
(அ) பொழுதுபோக்குப் பணி
(ஆ) இரசனை
(இ) படைப்பாக்க / கட்டுருவாக்கச் சிந்தனை

**(அ) பொழுதுபோக்குப் பணி**

- குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை அனைவருக்கும் பொழுதுபோக்கு அவசியமானதொன்று.
- வேலைப்பளு மிகுந்த தற்காலச் சூழலில் களைப்பைப் போக்க பொழுதுபோக்கு மிகவும் அவசியமானதொன்று.
- தொலைக்காட்சியில் இசை நிகழ்ச்சிகள், நாடகங்கள், கார்ட்டூன், திரைப்படம் மற்றும் மெய்மை நிகழ்ச்சிகள் பொழுதுபோக்கினை அளிப்பன.
- செய்திப்பத்திரிகையில் கார்ட்டூன் மற்றும் சித்திரிப்புக் கட்டுரைகள் என்பன பொழுதுபோக்கினை அளிப்பன.
- வானொலியில் இசை மற்றும் பாடல் நிகழ்ச்சிகள் பொழுதுபோக்கினை அளிப்பன.

**(ஆ) இரசனை**

- சுவை ஒன்றை அறிந்து கொள்வதற்கும் இரசிப்பதற்கும் ஒருவருக்குள்ள திறனே இரசனையாகும்.
- ஒருவரின் கல்வி, அறிவு, அனுபவம் மற்றும் பண்பாட்டுத் தெளிவு ஆகியவற்றின் மூலம் அவரின் இரசனை நிலையினை உணரமுடியும்.
- நாடகம், பாடல், கவிதை, நாவல் என்பனவற்றை ஒருவருக்கு இரசிக்க இயலுமாயிருப்பது இரசனை மூலமாகும்.

**(இ) படைப்பாக்க / கட்டுருவாக்கச் சிந்தனை**

- அனுபவங்கள், கற்பனை அல்லது சிந்தனைகளை ஆக்கபூர்வமான படைப்பாக்கங்களாக உருவாக்க அவசியமானது.
- எளிமையான மற்றும் ஆழ்ந்த கருத்துக்களைக் கொண்ட ஆக்கங்களையும் படைப்பாக்க / கட்டுருவாக்கச் சிந்தனை மூலமாக உருவாக்கலாம்.
- ஓர் படைப்பில் படைப்பாளியின் படைப்பாக்க / கட்டுருவாக்கச் சிந்தனையை அறியலாம்.
- பெறுநரது இரசனை படைப்பாளியின் படைப்பாக்க / கட்டுருவாக்கச் சிந்தனையைப் பொறுத்து வேறுபடும்.
- வியாபார விளம்பரங்கள் படைப்பாளியின் படைப்பாக்க / கட்டுருவாக்கச் சிந்தனை மூலமே உருவாக்கப்படுகின்றன.

(1 X 3 = 3 புள்ளிகள்)

(iv) இலக்கமுறை (digital) புகைப்படவியலின் விசேட இயல்புகள் நான்கினை விபரிக்குக.

- உயர் ஒளி உணர்வினைக் கொண்டதால் குறைவான ஒளியிலும் தெளிவான புகைப்படத்தை எடுக்கலாம்.
- புகைப்படக் கருவியை வாங்குவதற்கு அதிக பணம் செலுத்தவேண்டிய போதிலும் பின்னர் புகைப்படச்சுருள் மற்றும் நினைவட்டைகளை வாங்குவதற்கு அதிக பணம் செலுத்தத் தேவையில்லை.

- எடுத்த புகைப்படத்தை உடனடியாகப் பார்வையிடும் வசதி உள்ளது.
- புகைப்படம் எடுக்கும்போதும் பின்னர் செம்மையாக்கம் செய்யும்போதும் அதிக நேரம் செலவழியாது.
- தேவையற்ற புகைப்படங்களை அழித்துவிட முடியும்.
- இகுவாகக் கணினியுடன் இணைக்கமுடியும் என்பதால் புகைப்படங்களை வினைத்திறனான வகையில் செம்மையாக்கம் செய்யும் வசதி உள்ளது.
- மின்னஞ்சல், இணையம், கைத்தொலைபேசி போன்ற தொடர்பாடல் சாதனங்களுடன் இணைப்பது இலகுவானது.
- எண்சார் தொழினுட்பத்தில் புகைப்படங்களைக் களஞ்சியப்படுத்துவதால் காலம் கடந்தும் புகைப்படங்களின் பண்புத்தரம் குறைவடையாது காணப்படும்.
- உயர் தொழினுட்ப சாதனங்களையும் இலகுவில் பயன்படுத்தக்கூடியதாக உள்ளது.
- தேவையேற்படும் பொழுதுகளில் புகைப்படங்களைப் பயன்படுத்தக்கூடிய வசதி உள்ளது.
- மிகவும் தெளிவான புகைப்படங்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வசதி உள்ளது.

(1 X 4 = 4 புள்ளிகள்)

(நான்கு இயல்புகளும் விபரிக்கப்பட்டிருந்தால் மாத்திரம் முழுப் புள்ளிகள் வழங்குக. பெயரிட்டிருந்தால் 1 புள்ளி வழங்குக.)

6. (i) அதிவேகத்தில் பொருளொன்று சுற்றும்போது, அதன் நிலைபடு இடத்தையும் இடைவெளியையும் தனியாக அவதானிப்பது இயலாதிருக்கின்றது. இக்கோட்பாடு எவ்வாறு அழைக்கப்படுகின்றது?

பார்வையின் தொடரறாத் தன்மை / பார்வைத் தொடர்ச்சி (1 புள்ளி)

(ii) தொலைக்காட்சி ஒளிபரப்பில் பயன்படும் முக்கிய தொழில்நுட்ப முறைமைகள் இரண்டினைப் பெயரிடுக.

- அனலொக் தொழினுட்பம்
- டிஜிட்டல் தொழினுட்பம் (இலக்கமுறைத் தொழில்நுட்பம்)

(2 புள்ளிகள்)

(iii) தொலைக்காட்சி ஊடகத்துடன் தொடர்புடைய பின்வரும் பெறுநர் வகைத்தொகுதியினரைத் தனித்தனியாக ஆய்ந்தறிக.
(அ) பால் நிலை
(ஆ) வயது மட்டம்
(இ) கல்வி மட்டம்

**(அ) பால்நிலை**

- இதுவொரு சமூகவிஞ்ஞான எண்ணக்கருவாகும். தொலைக்காட்சி ஊடகத்தில் பால்நிலை சித்திரிக்கப்படும் விதம் இங்கு ஆராயப்படும்.
- தொலைக்காட்சி ஊடகத்தில் பால்நிலை தொடர்பில் முன்வைக்கப்படும் சித்திரிப்பு வேறுபட்டது.
- தொலைக்காட்சியுடன் தொடர்புபட்ட வகையில் பால்நிலை பற்றி நோக்கின் ஆண், பெண் நிலைகளுக்கேற்ப நிகழ்ச்சிகள் வகைப்படுத்தப்படுவதோடு அவற்றின் உள்ளடக்கமும் வேறுபடும்.

**(ஆ) வயது மட்டம்**

- சிறுவர், இளையோர், முதியோர் எனும் அடிப்படையில் நிகழ்ச்சிகள் வகைப்படுத்தப்படல்.
- இளையோருக்கு மெய்மை நிகழ்ச்சிகளும், சிறுவர்களுக்கு கார்ட்டூன் நிகழ்ச்சிகளும், பெண்களுக்கு அழகுக்குறிப்பு தொடர்பான நிகழ்ச்சிகளும், ஆண்களுக்குச் செய்தி நிகழ்ச்சிகளும் ஒளிபரப்பப்படல்.

**(இ) கல்வி மட்டம்**

அறிவு மட்டத்திலும் பாமரர் தொடங்கிப் படித்தவர்கள் வரை அவர்களுக்குப் பொருத்தமான நிகழ்ச்சிகளை உருவாக்கி (கிராமியப் பண்பாடு நிறைந்த மற்றும் கல்வி நிகழ்ச்சிகள்) ஒளிபரப்புதல்.

(1 X 3 = 3 புள்ளிகள்)

(iv) தொலைக்காட்சி ஊடகத்தினால் சமூகத்தில் ஏற்படும் எதிர்மறைச் செல்வாக்கினைப் பின்வரும் அம்சங்களின்பேரில் விளக்குக.
(அ) மொழி
(ஆ) இரசனை
(இ) வன்முறை
(ஈ) பண்பாடு

**(அ) மொழி**

- தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் தமிழ் மற்றும் ஆங்கில மொழி பயன்படுத்துதல்.
- பாரம்பரிய மொழிநடை மாற்றமடைதல்.
- சுதேச மொழியில் தாக்கங்கள் ஏற்படுகின்றன.
- பிரதேச (வட்டார) மொழிப் பாவனைகள்.
- தவறான / அநாகரிகமான மொழிப் பாவனை

**(ஆ) இரசனை**

- பாலுணர்வைத் தூண்டும் வண்ணம் அமைதல்.
- சாதாரண நிகழ்ச்சிகளின்பால் இரசனை உருவாதல்.
- சிறுவர்களின் இரசனை மற்றும் வயதிற்குப் பொருத்தமற்ற உள்ளடக்கங்களைக் கொண்டிருத்தல்.

**(இ) வன்முறை**

- தொலைக்காட்சி உள்ளடக்கத்தின் வழியாக வன்முறை உருவாகலாம்.
- குற்றச்செயல்கள், போதைப்பாவனைகள் போன்றவற்றினூடாக இரசிகர்களின் மனங்கள் திரிவுபடுத்தப்பட்டு வன்முறைச் செயற்பாடுகள் தோன்றுகின்றன.
- வீரதீரச் செயல்களின் மூலம் சிறுவர்கள் இலகுவாக ஈர்க்கப்பட்டு எதிர்மறையான விளைவுகள் தோற்றம் பெறுகின்றன.

**(ஈ) பண்பாடு**

- சுதேச பண்பாடு வீழ்ச்சியடைதல்.
- வணிக நோக்கங்களை முதன்மையாகக் கொண்ட நிகழ்ச்சிகளால் பண்பாடு பாதிப்படைதல்.
- சுதேச பண்பாட்டம்சங்களின் கருப்பொருள் / அர்த்தங்கள் மாற்றடைதல்.

(1 X 4 = 4 புள்ளிகள்)

7. பாடசாலைகளுக்கிடையிலான ஊடக விழாவின் கருப்பொருளாக 'நல்லதொரு ஊடகப் பண்பாட்டை நோக்கி' என்பது அமைந்திருந்தது.

(i) ஊடக விழாவிற்குச் சமாந்தரமாக நடத்தப்பட்ட பேச்சுப்போட்டியில் பேச்சாளரின் மொழித் தேர்ச்சியை அளவிடப் பயன்படக்கூடுமான அம்சமொன்றைப் பெயரிடுக.

உச்சரிப்பு

கருத்து வெளிப்பாடு

பொருத்தப்பாடு (1 புள்ளி)

(ii) ஊடக விழாவில் திரைப்படங்களைத் திரையிட அவசியம் பயன்படுத்த வேண்டிய ஊடகக் கருவிகள் **இரண்டினைப்** பெயரிடுக.

பல்லூடக எறிவை

திறன் தொலைக்காட்சி

ஊடாடுகைப் பலகை (2 புள்ளிகள்)

(iii) 'புகைப்படவியலாளர் சுய கட்டுப்பாட்டை அவசியம் விருத்திசெய்து கொள்ள வேண்டும்' என்பது ஊடக விழாவில் கலந்துரையாடப்பட்டது. புகைப்படவியலுடன் தொடர்புடைய ஒழுக்கநெறிகள் மூன்று பற்றிக் குறிப்புகள் எழுதுக.

- வேறு புகைப்படப்பிடிப்பாளர்களின், படைப்பாளியின் அனுமதியின்றி தன்னுடைய தேவைக்கு புகைப்படங்களை உபயோகக்கப்படுதல்.
- ஒருவரின் அனுமதியின்றி அவரைப் புகைப்படம் எடுத்தல் அல்லது அவ்வாறான புகைப்படத்தைத் தன்னிடம் வைத்திருத்தல்.
- வேறு ஒருவருடைய புகைப்படத்தை அவருக்குத் தெரியாமல் இணையத்தளத்தில் பதிவேற்றல் அல்லது பிரசித்த ஊடகங்களில் வெளியிடுதல் அல்லது பரிமாறிக் கொள்ளுதல்.
- வேறு ஒருவரின் புகைப்படத்தை தொழினுட்பம் மூலம் கையாள்தல் அல்லது விகாரப்படுத்துதல்.
- புகைப்படம் மூலம் ஒருவரை மிரட்டல்
- வேறு ஒருவருடைய நடவடிக்கைகளுக்குப் பங்கமேற்படும் வகையில் புகைப்படம் எடுத்தல்.

(1 X 3 = 3 புள்ளிகள்)

(மூன்று ஒழுக்கநெறிகள் விபரிக்கப்பட்டிருந்தால் மாத்திரம் முழுப் புள்ளிகள் வழங்குக. பெயரிட்டிருந்தால் 1 புள்ளி வழங்குக.)

(iv) 'விமர்சனத்திறனுள்ள பெறுநராயிருத்தல்' எனும் கருப்பொருள் பற்றி நான்கு அம்சங்களின் கீழ் கட்டுரையொன்று எழுதுக.

- விமர்சனரீதியான பெறுகை என்பது ஊடகத் தகவல்களை விமர்சனரீதியாகப் பெறுகை செய்வதற்கும் அதனை பொறுப்புணர்வுடன் நுகருவதற்குமான ஆற்றலாகும்.
- ஊடகத் தகவல்களின் நோக்கம் மற்றும் உள்ளார்ந்த நோக்கம் என்பவற்றை அறிந்துகொள்தல்.
- தனக்கும் சமூகத்திற்கும் பாதிப்பு ஏற்படாத வண்ணம் ஊடகத் தகவல்களை நுகர்தல்.
- ஊடக உரிமையாண்மை தொடர்பில் அறிந்து செயற்படுதல்.
- ஊடகத்துடன் தொடர்புடைய வணிக மற்றும் சமூகக் காரணிகள் தொடர்பில் அறிந்திருத்தல்.

- தனது பண்பாடு பற்றிய விழிப்புணர்வுடன் மற்றும் பண்பாட்டுக்கும் ஊடகத்திற்கும் இடையிலான தொடர்பை அறிந்தவராகச் செயற்படுதல்.
- ஊடகம் வழியாகத் தன்னுடைய அறிவை விருத்தி செய்பவராக இருத்தல்.
- ஊடகச் செயற்பாடுகள் மற்றும் ஊடகங்களின் தந்திரோபாயங்கள் தொடர்பில் அறிந்திருத்தல்.

(1 X 4 = 4 புள்ளிகள்)

(மேற்காணும் விடயங்களில் நான்கைப் பயன்படுத்தி கட்டுரை வடிவில் பதிலளிக்கப்பட்டிருந்தால் மாத்திரம் முழுப் புள்ளிகள் வழங்குக. பெயரிட்டிருந்தால் 1 புள்ளி வழங்குக.)